**பாளையங்கோட்டை மத்தியசிறை கண்காணிப்பாளர்செயல்முறை ஆணைகள்**

முன்னிலை- திரு. கு. சங்கர் ., பி.எஸ்.சி.,

எண். 9559 / பொ.1 / 2019 நாள் 08.11.2021

பொருள் - சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் - மத்தியசிறை, பாளையங்கோட்டை - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் மூலம் தேர்வு செய்யப்பட்ட திரு. ஐ. மகேஷ் நாராயண கிஷோர், இளநிலை உதவியாளர் என்பவர் பாளையங்கோட்டை மத்திய சிறையில் 07.03.2019 முற்பகல் நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவத்தில் [illegible] - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை: 1) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண்.1350 / PSD - G1 / 2019, நாள் 16.02.2019

2) காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணை எண்.7394 / இ.எஸ்.1 / 2019-13, நாள் 01.03.2019

3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். 9559 / பொ 1 / 2019, நாள். 07.03.2019

*****

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்ட திரு. ஐ. மகேஷ் நாராயண கிஷோர் என்பவர் பார்வை 2 ல் காணும் காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணையின் படி பாளையங்கோட்டை மத்திய சிறையில் 07.03.2019 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

2. பார்வை 2 ல் காணும் காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணையில் தெரிவித்துள்ளவாறு மேற்கண்ட இளநிலை உதவியாளர் திரு. ஐ. மகேஷ் நாராயண கிஷோர் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் சென்னை உயர்நீதி மன்ற / மதுரை கிளை, சென்னை உயர்நீதி மன்றத்தில் 2015 - 2018 ம் வரையிலான காலத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் Group - IV க்கான வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டு 07.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப் படுத்தி ஆணையிடப்படுகிறது.

3. மேலும் இப்பணியாளர் 07.03.2019 முற்பகல் தொடர்ந்து மூன்றாண்டு காலத் தொடர் பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இத்தகுதிகாண் பருவகாலத்தில், அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும். இதன் பின்னரே இவரது தகுதிகாண்பருவம் நிறைவு செய்ததாக ஆணை பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

4. இச்செயல்முறை ஆணையினை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சிறைக்கண்காணிப்பாளர்
மத்திய சிறை, பாளையங்கோட்டை

பெறுநர்
திரு. ஐ. மகேஷ் நாராயண கிஷோர், இளநிலை உதவியாளர், மத்திய சிறை, பாளையங்கோட்டை.

**நகல்**
காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை, சென்னை -8.

- மேலான தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் - அ.மே. / அ.க.கா / பொ. 4 / இ.கோ